தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 8, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்".

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்று இல்லை.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தையல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்

420—(* வினா எண் 10363) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தையல் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியம் ஏதேனும் நிர்ணயித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியம் வழங்குகிற திட்டம் பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்பொழுது அமுல்படுத்தப்படும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, தனியார் நடத்துகிற கார்மென்ட் எக்ஸ்போர்ட் கம்பெனிகளில் எல்லாம்

பெரும்பாலும் பெண்களே வேலை செய்கிறார்கள். அவர்கள் காலை 8-00 மணியிலிருந்து மாலை 6-00 மணி வரை வேலை செய்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளமாக ரூ. 5, 6 தான் தருகிறார்கள். ஆகவே, கட்டாயமாக, வெகு விரைவிலே இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு உத்தேசிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்று மாதச் சம்பளமாக நிர்ணயித்து 24—6—1981 முதல் அமுல்படுத்துவதென அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். கோர்ட்டில் 5 வருஷம் இருந்தது. இப்பொழுது, 29—9—1986-ல் நாம் போட்ட அந்தக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செல்லும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இப்பொழுது 5 ஆண்டுகள் ஆகிவிட்டதனால் மீண்டும் அறிவிக்கை முறையில் அந்தச் சம்பளத்தை மாற்றியமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகிற தையல் கடைகளில் எல்லாம் ஒரு பேன்ட் தைப்பதற்கு ரூ. 60 என்று நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் பேன்ட் துணியினுடைய விலையே ரூ. 60 தான். ரூபாய் 60-க்கு பேன்ட், ஷர்ட் துணி வாங்கி, அதே விலைக்குத் தைக்க வேண்டுமென்றால், சில நேரங்களில் முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, மளிகைக் கடைகளிலே விலைப் பட்டியல் வைத்திருப்பதைப் போல தையல் கடைகளிலே துணிகளைத் தைப்பதற்கு இவ்வளவுதான் வாங்க வேண்டுமென்று ஒரு நிர்ணயம் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் அவசரமாக ஆணை பிறப்பிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, துணிக்குத் தகுந்த தையல்காரரைத் தேடுவதை விட, கூலிக்குத் தகுந்த தையல்காரரைத் தேடுவது நல்லது. விலைப் பட்டியல் வெளியிடப்பட வேண்டுமென்று சொன்னாலும்கூட, மனம் இருந்தால்தான் அவற்றிற்கெல்லாம் மார்க்கம் உண்டு.

1987 ஏப்ரல் 21]

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தையல் கலைஞர்களை ஒன்று சேர்த்து ஆங்காங்கே தையல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவர்களுக்கு எம்.சி.சி. வங்கி, டி.என்.எஸ்.சி. வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அவர்களே சொந்தமாக அந்தத் தையல் மெஷின்களை வாங்கித் தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே அவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், தொழிலாளர் நல அமைச்சர் நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி திருத்தி அமைக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோளாகத் தெரிவிக்க விரும்புவது, குறைந்தபட்சக் கூலி அறிவிக்கப்படுகிறபொழுது, நடைமுறையில் தொழிலாளர்கள் வாங்குகிற சம்பளத்தைக் காட்டிலும் குறைவாகத்தான் பல நேரங்களில் அறிவிக்கப் படுகிறது. எனவே நடப்பில் நிலவுகிற அதிகபட்ச சம்பளத்தைக் குறைந்தபட்சமாகக் கவனத்தில் கொண்டு, அதிலிருந்து அதிக பட்சமாக நிர்ணயிப்பதற்குரிய வரையறையை அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலி நிர்ணயித்ததினுடைய நோக்கமே இதனால் தவிடுபொடியாகிவிடும். இதற்குக் கீழ் போகக் கூடாது என்பதைத்தான் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு மேல் போகக் கூடாது என்று நாம் சொல்லக் கூடாது. அதிகபட்சமாக உள்ள கூலியைக் குறைந்தபட்சக் கூலியாக நிர்ணயித்தால் தொழிலே இல்லாமல் போய் விடும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தையல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி, மாதச் சம்பளமாக

நிர்ணயிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், சில பகுதிகளிலே தையல் தொழிலாளர்கள் ஒரு மூட்டைக்குத் தையல் கூலி இவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொண்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்கு வரச் சொன்னால் வராமல் இருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு முன்வராது.

விளாத்திகுளம் தொகுதி மேல்மாந்தை பிரிமியர் சால்ட் ஓர்க்ஸ் தொழிற்சாலை

421—(* வினா எண் 11578) திரு. சு. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள மேல்மாந்தையில் பிரிமீயர் சால்ட் ஓர்க்ஸ் தொழிற்சாலையில் 22 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி தொழிலாளர் அலுவலர் மூலமாக வேலைநீக்கம் தொடர்பாக 22 தொழிலாளர்களையும் தனித்தனியாகவோ அல்லது தொழிற்சங்கம் மூலமாகவோ தாவா எழுப்பும்படி ஆலோசனை வழங்கியும் இந்நாள் வரை முறையாக தொழிற்தாவா எழுப்பப்படாததால் 22 தொழிலாளர்கள் வேலை நீக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS